S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE செவ்வாய் ஜனவரி 14 * 2026 * மலர் -1 * இதழ்-227* VOL-1 * ISSUE-227 விலை ரூ.3 * பக்கம் -4

## ஜனவரி 17–ஆம் தேதி பயணம்:

# அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!



சென்னை, ஜன.14

அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்தொடங்கிவைத்து நேரில் பார்வையிடுகிறார். இதற்காக வருகிற 17–ஆம் தேதி அவர் மதுரை செல்கிறார்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஆண்டு தோறும் மதுரையை அடுத்த அவனியாபுரம், பாலமேடு மற்றும் அலங்காநல்லூரில் ஏறு தழுவுதல் என அழைக்கப்படும் ஜல்லிக்கட்டு போட்டி நடத்தப்பட்டு வருகிறது. இதில் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு மிகவும் உலகப்புகழ் பெற்றது.

இங்கு நடைபெறும் போட்டியைக் காண இந்தியா மட்டுமின்றி பல்வேறு வெளிநாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளும் அதிக அளவில் வருகை தருகின்றனர்.

இந்த ஆண்டுக்கான அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டி வருகிற 17–ஆம் தேதி நடைபெறுகிறது. இதற்கான முன்னேற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இப்போட்டியில் கலந்துகொள்ளும் மாடு பிடி வீரர்களுக்கானமுன்பதிவு நடந்து முடிந்தது. அதன் படி ஏராளமான மாடுபிடி வீரர்களும் போட்டியில் கலந்துகொள்ள உள்ள காளைகளின் உரிமையாளர்களும் இணையதளம் மூலம் தங்கள் பெயர்களை ஆர்வத்துடன் பதிவு செய்தனர்.

இந்நிலையில் வருகிற 17–ஆம் தேதி அலங்காநல்லூரில் புதிதாக கட்டப்பட்டுள்ள கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கத்தில் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறுகிறது.



இதில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு போட்டியை தொடங்கி வைக்கிறார். மேலும் ஜல்லிக்கட்டு போட்டியையும் அவர் பார்வையிடுகிறார். அவருடன் அமைச்சர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள், பொதுமக்கள் பங்கேற்கி'ன்றனர்.

மேலும் மதுரை அவனியாபுரம், பாலமேடு ஆகிய இடங்களிலும் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெற உள்ளன. அவனியாபுரத்தில் வருகிற 15–ஆம் தேதியும், பாலமேட்டில் வருகிற 16–ஆம் தேதியும் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெற உள்ளன.

பாலமேட்டில் உள்ள மஞ்சமலை சுவாமி ஆற்றுத் திடலில் வாடிவாசல், பார்வையாளர் மாடம் போன்றவை அமைக்கப்பட்டு அவை தயார் நிலையில் உள்ளன. மேலும் இங்கு 2 அடுக்கு பாது காப்பு வேலிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

பாலமேட்டில் நடைபெறும் ஜல்லிக்கட்டு போட்டியை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். இதில் அமைச்சர்கள், முக்கியப் பிரமுகர்கள், ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்கின்றனர்.

வழக்கமாக சிறந்த மாடுபிடி வீரருக்கு கார் பரிசாக வழங்கப்பட்டு வந்தது. தற்போது பா.ம.க. மற்றும் விவசாயிகள் கோரிக்கைகளின் படி டிராக்டர் கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சி ஏற்பாடுகள் அனைத்தும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்று வருகிறது. மேலும். போட்டிகள் அனைத்தும் எந்தப் பிரச்சினையுமின்றி நடக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.



தூத்துக்குடிமாவட்டம்,கருங்குளம்அருகேகால்வாய்கிராமத்தில்சமுதாயநலக்கூடத்தை கனிமொழி எம்.பி. திறந்து வைத்தார். அருகில் கலெக்டர் இளம்பகவத், எம்.எல்.ஏ.க்கள் ஊர்வசி அமிர்தராஜ், சண்முகையா மற்றும் பலர் உள்ளனர்.



தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை, ஊரக, நகர்ப்புற வாழ்வாதார இயக்க பணியாளர்கள் சங்கம் மற்றும் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை தொழிலாளர் சங்கம் சார்பில் கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பு 14 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி 6–வது நாளாக கொட்டும் மழையில் காத்திருப்பு போராட்டம் நடந்தது.



பொங்கல் பண்டிகையையொட்டி தென்காசி பஜாரில் விற்பனைக்காக கரும்புகள் குவிக்கப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

## பொங்கலை முன்னிட்டு பள்ளிகளுக்கு 5 நாள் விடுமுறை!



சென்னை, ஜன.14

பொங்கல் பண்டிகை வரும் 15–ம் தேதி கொண்டாடப்படுகிறது. மறுநாள் 16–ம் தேதி மாட்டுப் பொங்கல், 17–ம் தேதி காணும் பொங்கல் வருகிறது. அதனால், ஜனவரி 15,16,17 ஆகிய 3 நாட்களுக்கு அரசு விடுமுறை அளிக்கப்பட்டது. 18–ம் தேதி ஞாயிற்றுக்கிழமை வழக்கமான விடுமுறை. இந்நிலையில், பொங்கலுக்கு முந்தைய நாளான ஜன.14–ம் தேதி போகி பண்டிகை கொண்டாடப் படுவதால், அன்று அரசு விடுமுறை அளிக்க வேண்டும் என்று கோரிக்கைகள் வைக்கப்பட்டன.

அன்றுவிடுமுறைஅளித்தால், தொடர்ச்சியாக 5 நாட்கள் விமுறை கிடைக்கும் என்று எதிர்பார்த்தனர். இந்நிலையில், தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் ஜன.14–ம் தேதி விடுமுறை அளிக்கப்படுவதாக பள்ளிக்கல்வி த் து றை அறிவித்துள்ளது. இதனால், மாணவர்களும், ஆசிரியர்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தினமும் படியுங்கள் உள்ளாட்சி அரசு





# ஈரோட்டில் திமுக சார்பில் மகளிருக்கான திருவிழா என்ற தலைப்பில் தமிழர் திருநாள் விளையாட்டுப் போட்டிகள்!

## அமைச்சர் முத்துசாமி பரிசுகளை வழங்கினார்!!

ஈரோடு,ஜன.14

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஈரோட்டில் திமுக சார்பில் மகளிருக்கான திருவிழா என்ற தலைப்பில் பிரம்மாண்ட விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இந்த விழாவில் ரங்கோலி, புள்ளி கோலம், காய்கறிகளைக் கொண்டு உருவங்களை வடிவமைத்தல் மற்றும் மெஹந்தி உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் மகளிருக்காக நடத்தப்பட்டன. இதில் ஈரோடு கிழக்கு மற்றும் மேற்கு சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த 400க்கும் மேற்பட்ட பெண்கள் மிகவும் உற்சாகத்துடன் கலந்து கொண்டு தங்களது தனித்திறமைகளை வெளிப்படுத்தினர். போட்டிகளை நடுவர்கள் நேரில் பார்வையிட்டு மதிப்பெண்கள் வழங்கியதன் அடிப்படையில், ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பிடித்த வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இதனைத் தொடர்ந்து நடைபெற்ற பரிசளிப்பு விழாவில், அமைச்சர் முத்துசாமி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, வெற்றி பெற்ற மகளிருக்கு குக்கர், கிரைண்டர் மற்றும் ரொக்கத் தொகை உள்ளிட்ட பரிசுகளை வழங்கிப் பாராட்டினார். இந்த நிகழ்ச்சியில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் எம்.பி., ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் உட்பட ஏராளமானோர் இருந்தனர்.



சென்னைமாவட்டத்தில்16சட்டமன்றத்தொகுதிகளுக்கான4,079வாக்குச்சாவடிகளிலும், வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் மேற்கொள்ளுதல் தொடர்பான சிறப்பு முகாம் நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக, அண்ணாநகர் சட்டமன்றத் தொகுதி, ஷெனாய் நகர், புல்லா அவென்யூவில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சிறப்பு தீவிரத் திருத்த பணிக்கான வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம் நடைபெற்றது.



அனைத்திந்திய காலம் கனவு அறக்கட்டளை சார்பாக பொங்கல் பண்டிகை முன்னிட்டு சுமார் 100 நபர்களுக்கு புத்தாடைகள் மற்றும் இனிப்புகள் வழங்கும் நிகழ்ச்சியை அறக்கட்டளையின் நிறுவனர் சென்னையன், இணை நிறுவனர் நாகராஜ் மற்றும் சமூக ஆர்வலர் முனிராஜ் ஏற்பாடு செய்திருந்தனர். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக அரூர் சட்டமன்ற உறுப்பினர் சம்பத்குமார் மற்றும் தொழிலதிபர் SSS ஜூவல்லர்ஸ் பழனிவேல், தீபா சில்க்ஸ் உரிமையாளர் சம்பத் மற்றும் அதிமுக மொரப்பூர் ஒன்றிய செயலாளர்செல்வம்,முத்துஏஜென்சிஸ்உரிமையாளர்முத்து,பைரவாபேக்கரிஉரிமையாளர் சுரேஷ் மற்றும்,சாமிகான்னு,கார்த்திகேயன்,அய்யந்துரை,ஹரிஹரன்,வெற்றிவேல், கிரிதரன் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



கிருஷ்ணகிரிமாவட்டம்போச்சம்பள்ளிஅடுத்தமத்தூர்சேனைத்தலைவர்அறக்கட்டளை சார்பில் தைப்பொங்கல் பெருவிழா குடும்ப விழா மத்தூர் ஸ்ரீ வேடியப்பன் கோவில் வளாகத்தில் நேற்று நடந்தது. சமுதாய மக்கள் பானையில் பொங்கல் வைத்து சுவாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து கோயில் வளாகத்திற்குள் குடும்ப விழா துவங்கியது. மகளிருக்கு கோலப்போட்டி விளையாட்டு போட்டி உறியடித்தல் போட்டிகள் நடத்தி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. ஊர் செட்டியார் எம்.என்.கமலநாதன் மற்றும் சேனைத்தலைவர்அறக்கட்டளைதலைவர்நவீன்ஆகியோர்தலைமையில்,பொதுக்கூட்டம் நடந்தது. விழாவில், செயலாளர் அரிமா பிரசன்னா பொருளாளர் முருகேசன் அ.ம.மு.க மாவட்ட செயலாளரும் மத்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் கணேசகுமார், தொழிலதிபர் எம்.கே.எஸ்.மாதன், செந்தில், இராஜேந்திரன், பி.எஸ்.எ.தனம், அரிமா சரவணன், சென்னகிருஷ்ணன், ஆர்.ஆர்.ரவி, சபரி, செல்வமுரளி, வெங்கடேஷன், கார்த்தி, மற்றும் ஏராளமானோர் குடும்பத்துடன் கலந்து கொண்டனர்.



சென்னைமாவட்டத்தில்16சட்டமன்றத்தொகுதிகளுக்கான4,079வாக்குச்சாவடிகளிலும், வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் மேற்கொள்ளுதல் தொடர்பான சிறப்பு முகாம் நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக சேப்பாக்கம்திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதி, டாக்டர் பெசன்ட் சாலையில் உள்ள லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சிறப்பு தீவிரத் திருத்த பணிக்கான வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம் நடைபெற்றது.

# ஜெகதாப் கிராமத்தில் ஸ்ரீ பாதாள பிரத்தியங்கிரா காளி கோவிலில் 112வது தேய்பிறை அஷ்டமி!



கிருஷ்ணகிரி,ஜன.14

ஸ்ரீ மங்கள மஹா பாதாள பிரத்தியங்கிரா காளிக்கு [112]வது தேய்பிறை அஷ்டமி காய்ந்த மிளகாய் யாகம் இரவு 7.மணி முதல் இரவு 12.மணி வரை அஷ்டதிக்கு பைரவர் பூஜை,குருதி வாழைமரம் பூஜை, நிகும்பலா (காய்ந்த மிளகாய்) யாகம் நடைபெற்றது. அதைத்தொடர்ந்து ஊஞ்சல் தாலாட்டும் இரவு 8 மணி அளவில் அன்னதானம் நடைபெற்றது.முன்னதாக ஸ்ரீ விநாயகர் அருள்மிகு அங்காள பரமேஸ்வரி,சுடலை வனக்காளி, ஸ்ரீ வேடியப்பன், அன்னபூரணி, ஸ்ரீ வாராஹி அம்மன் ஆகிய தெய்வங்களுக்கும் சிறப்பு பூஜையும் பிரித்தியங்கிரா டிரஸ்ட் மற்றும் சக்தி ஸ்ரீ பிரகாஷ் சுவாமிகள் தலைமையில் 112வது தேய்பிறை அஷ்டமி காய்ந்த மிளகாய் யாகம் நடைபெற்றது. இதில் பக்தர்கள் கலந்து கொண்டு அருள் பெற்றனர்.

## புத்தாண்டில்

# பெரிய சபதங்களுக்கு பதிலாக எளிய பழக்கங்களை கடைபிடிக்க நடிகை அனன்யா பாண்டே உறுதி!



கோவை ,ஜன.14

ஒவ்வொரு புத்தாண்டு அன்றும் நாம் பல்வேறு சபதங்கள் அல்லது உறுதிமொழிகளை எடுத்துக் கொள்வோம். அதை கடைபிடிக்க கடும் முயற்சிகளையும் செய்வோம். ஆனால் இந்த புத்தாண்டில் நடிகை அனன்யா பாண்டே அவ்வாறு எந்தவிதமான பெரிய சபதமும் எடுத்துக் கொள்ளாமல், எளிமையான பழக்க வழக்கங்களை கடைபிடிக்க சபதம் ஏற்பதாக தனது புதிய இன்ஸ்டாகிராம் வீடியோ ஒன்றில், கண்ணாடியின் முன் நின்று பேசும் அவர், புத்தாண்டு தீர்மானங்கள் அல்லது சபதங்கள் நமக்குத் தரும் பழக்கப்பட்ட அழுத்தத்தைப் பற்றி மிகவும் வெளிப்படையாக கூறியிருக்கிறார்.காலம் எவ்வளவு வேகமாக ஓடுகிறது என்பதையும், "புதிய ஆண்டு, புதிதாய் நான்" என்ற எண்ணம் பல நேரங்களில் எப்படி பதட்டத்தைத் தருகிறது என்பதையும் அவர் ஒப்புக் கொள்கிறார். அதனால், அடைய முடியாத கடினமான இலக்குகளை நோக்கி செல்வதற்கு பதிலாக, எளிமையான மற்றும் தொடர்ந்து செய்யக்கூடிய பழக்க வழக்கங்களை கடைப்பிடிக்க இருப்பதாகவும் கூறியுள்ளார். அவை நல்ல தூக்கம், நிறைய தண்ணீர் குடிப்பது மற்றும் முறையாக உடற்பயிற்சி செய்வது என்றும் குறிப்பிடுகிறார். பார்ப்பவர்கள் அனைவருக்கும் ஆறுதல் அளிக்கும் வகையில் இந்த வீடியோ அமைந்துள்ளது. இறுதியில் அனன்யா அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்து, துவங்கி உள்ள இந்த ஆண்டை மிகவும் அன்பாகவும், விழிப்புணர்வுடனும் அணுகுமாறு கூறி வீடியோவை நிறைவு செய்துள்ளார்.

## வாணியம்பாடி அருகே

# வாணி பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வு!



வாணியம்பாடி, ஜன.14

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அருகே உள்ள வாணி பாலிடெக்னிக் மாணவர்கள் படித்து முடித்த பின்னர் மேற்கொண்டு என்ன செய்வது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் முனைவர் பி.நடராஜன் தலைமை வகித்தார். ஆசிரியர் ஏ.பாலமுருகன் முன்னிலை வகித்தார். ஆசிரியர் ஆர். திலீபன் அனைவரையும் வரவேற்றார். இதில் சிறப்பு அழைப்பாளராக மின் ஒப்பந்ததாரர் ஏ.இரவி கலந்து கொண்டு EEE மானவர்களுக்கு எதிர்காலம் படிப்பு மற்றும் வேலை வாய்ப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி பேசினார். நிகழ்ச்சியில் கல்லூரி பல்வேறு துறை தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். முடிவில் ஆசிரியை எஸ். சத்திய நன்றி கூறினார்.



கிருஷ்ணகிரி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் செல்லக்குமார் பிறந்தநாள் விழா மாவட்ட துணை தலைவர் விவேகானந்தன் தலைமையில் போச்சம்பள்ளி பஸ் ஸ்டாண்டில் அவர் வழங்கிய தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட குடிநீர் நிலையம் முன்பு வானில் பட்டாசு வெடித்து கேக் வெட்டி கொண்டாடி தலைவருக்கு வாழ்த்துக்கள் தெரிவித்து பொதுமக்களுக்கு ஹனி கேக் வழங்கப்பட்டது. நிகழ்வில் மாவட்ட பொதுச்செயலாளர் ஆறுமுகம், மாவட்ட செயலாளர்கள் நவாப், டேனியல், உறுப்பினர்கள் தனபால், சந்தூர் குமார், வட்டார பொருளாளர் கோவிந்தசாமி, தேவராஜ், ரவி உள்ளிட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து சிறப்பித்தனர்.



கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம் லங்கா கார்னர் பகுதியில் தேங்கும் மழை நீரை விரைவாக வெளியேற்றும் வகையில் சுமார் 45 மீட்டர் நீளத்திற்கு வடிகாலுடன் கூடிய ரெடிமேடு சிறுபாலம் அமைக்கும் பணிகளை மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# தருமபுரியில் இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர்கள் மற்றும் கட்சியின் முக்கிய ஊழியர்கள் கூட்டம்!



தருமபுரி ,ஜன.14

தருமபுரியில் இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர்கள் மற்றும் கட்சியின் முக்கிய ஊழியர்கள் கூட்டம் . தருமபுரி மின்னல் அரங்கில் மாநில தலைவர் ப .கீ. பட்டாபிராமன் தலைமையில் தருமபுரி மாவட்ட செயலாளர் ஜெ. பிரதாபன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் கட்சியின் மாநில செயலாளர் எம். சுந்தர்ராஜன் கலந்துக் கொண்டு இன்றைய அரசியல் நிலை குறித்தும், வருகின்ற 2026 ம் ஆண்டு நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்ட மன்ற தேர்தல் குறித்தும் பேசினார். இந்த கூட்டத்தில் மாவட்ட செயலாளர்கள் கணேசன் (மதுரை),கோபால்(தேனி), காளியப்பன்(தென்காசி),சுப்பிரமணி(தஞ்சாவூர்),சுப்பிரமணியம்(கடலூர்),சங்கர்(திருப்பத்தூர்), குணசேகரன்(ஈரோடு),ஜெயன்(திருப்பூர்) மற்றும் தருமபுரி மாவட்ட துணைச்செயலாளர்கள் ஜி. மாதையன்,சி. பாலன்,பொருளாளர் அலமேலுஎத்துராஜ், நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பி. இரவி,ஜி. பச்சாகவுண்டர்,என். பி. ராஜி,ஜி .ராஜகோபால்,எல். சி. கிருஷ்ணன்,விவசாயிகள் சங்க தலைவர் மாதன் மற்றும் காளியம்மாள்,பாப்பம்மாள் , மாநிலத்திலிருந்து முக்கிய ஊழியர்கள் கலந்துக் கொண்டனர்.

இக்கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவே ற்றப்பட்டன.



திருப்பூர் தெற்கு மாவட்டம் சூர்யா நற்பணி இயக்கம் இளைஞரணி சார்பாக மாதம் ஒரு நற்பணி செய்து கொண்டு வருகின்றனர் எனவே 8'ஆம் மாத நற்பணியாக தாராபுரத்தில் பழனி செல்லும் பாதயாத்திரை பக்தர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு பதாகை தாராபுரம் முழுவதும் வைக்கப்பட்டுள்ளது இதில் மாவட்ட இளைஞரணி பொறுப்பாளர்கள் குகன் மற்றும் அகிலன் தலைமையில் நடைபெற்றது இதில் உறுப்பினர்களானதன்வின், விமல், சரவணன், அஜய், நவீன், ஆனந்த், புகழ் மணி ஆகியோர் பங்கேற்றனர் மேலும் பாதயாத்திரை செல்லும் பக்தர்கள் ஏதேனும் அவசர உதவிக்கு அவர்களை தொடர்பு கொள்ளும் வகையில் தொலைபேசி 8248969232,8489875351,




# "பொறியியல், மருத்துவம் மற்றும் ஒலிம்பியாட் துறைகளில் கோயம்புத்தூரின் சிறந்த மாணவர்களுக்கான அலன் கரியர் இன்ஸ்டிட்யூட் SOPAN 2025 பாராட்டு விழா!

கோவை.,ஜன.14

பொறியியல் மற்றும் மருத்துவ நுழைவுத் தேர்வுகளில் சிறப்பாக சாதித்து முன்னணி தேசிய கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற கோயம்புத்தூரின் சிறந்த மாணவர்களை கௌரவித்தது. இந்த நிகழ்ச்சி, இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அமைந்துள்ள டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அரங்கில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினர்கள், கல்வியாளர்கள், பெற்றோர்கள் மற்றும் சாதனையாளர்கள் ஒன்றிணைந்தனர்ஈரோடு, கரூர், சேலம், நாமக்கல் மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களைச் சேர்ந்த மதிப்புமிக்க கல்விப் பள்ளிகள் மற்றும் மாணவர்களுக்கு ஆலன் கோயம்புத்தூர் ஒரு சிறந்த வழிகாட்டுதல் தளத்தை வழங்குகிறது.இந்த ஆண்டு நடைபெற்ற விழாவில் பொறியியல், மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் மாணவர்கள் பெற்ற அபூர்வமான சாதனைகளை பதிவு செய்தது. இதில் 16 மாணவர்கள் IITகளில், 27 மாணவர்கள் NITகளில், 10 மாணவர்கள் IIITகளில், 2 மாணவர்கள் BITSஇல், 1 மாணவர் IIST இல், 3 மாணவர்கள் IISERகளில், 10 மாணவர்கள் VITஇல் சேர்க்கை பெற்றனர். மேலும், 90 மாணவர்கள் அரசு மருத்துவக் கல்லூரியிலும் 170 மாணவர்கள் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கை பெற்றுள்ளனர். இந்த விழாவில் விருந்தினர்களாக, சக்தி கல்வி நிறுவனங்களின் துணைத் தலைவர் திரு. ஈ.ஆர். தீபன் தங்கவேலு, பிருந்தாவன் வித்யாலயாவின் தாளாளர் மற்றும் முதல்வர் திருமதி வனிதா திருமூர்த்தி, கோவை வித்யாஷ்ரமத்தின் தாளாளர் மற்றும் கல்வி இயக்குநர் டாக்டர் எஸ்.பி. தேன்மொழி ஆகியோர் கலந்து கொண்டனர். முறைமை கல்வித் துறையை பிரதிநிதித்துவப்படுத்தி, ஏ.வி.ஜி. பள்ளியின் முதல்வர் திரு சிவக்கொழுந்து, தி என்.ஜி.பி. பள்ளியின் முதல்வர் திருமதி பிரீதா, தி என்.ஜி.பி. பள்ளியின் ஒருங்கிணைப்பாளர் திரு. நடராஜ், பிருந்தாவன் பப்ளிக் பள்ளியின் துணை முதல்வர் திருமதி முத்துக்குமாரி, மவுண்ட் லிட்டெரா ஜீ பள்ளியின் முதல்வர் திரு. வெங்கட் மற்றும் அத்வைத் தாட் அகாடமி ஒருங்கிணைப்பாளர் திருமதி கவிதா ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சியில் முதன்மை விருந்தினராக இந்திய வருவாய் சேவையைச் சேர்ந்த (IRS) வருமான வரி ஆணையர் டாக்டர் ஏ. ஸ்ரீநிவாசன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

# புதுக்கோட்டை அருகே இளைஞர் ஓட ஓட விரட்டி கொலை!







புதுக்கோட்டை,ஜன.14

புதுக்கோட்டை மாவட்டம் கீழ வேப்பங்குடி பகுதியைச்சேர்ந்த ஜெய்சங்கர் என்பவரது மகன் இன்பரசன்(25). இவர் சென்ட்ரிங் வேலை செய்யும் கூலித் தொழிலாளி யாக உள்ளார். மேலும் இவர் ஜல்லிக்கட்டு காளையை வளர்த்து வரும் நிலையில் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு வரைஜல்லிக்கட்டு மாடு பிடி வீரராகவும் இருந்து வந்துள்ளார்.

இந்நிலையில்தான் பொற்பனைக்கோட்டை மணக்கொ ல்லை தோப்பு கிராமத்தைச் சேர்ந்த விக்னேஷ்(21), தெ ற்கு இம்மனாம்பட்டி ரஞ்சித் மற்றும் இவர்களது நண்ப ர்கள் ஒன்றிணைந்து அன்பு பாய்ஸ் என்ற பெயரில் குழு அமைத்து ஜல்லிக்கட்டு காளைகளை வளர்ப்பது, ஜல்லி க்கட்டு காளைகளை வாடி வாசலில் இறங்கி பிடிப்பது உள்ளிட்டவற்றில் தொடர்ந்து ஈடுபட்டு வந்துள்ளனர்.

இந்நிலையில்தான் கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற ஒரு ஜல்லிக்கட்டில் இன்பரசன்அன்புபாய்ஸ்பெயரில் அவிழ்க்கப்பட்ட காளையை பிடித்துள்ளார். இதனால் அன்பு பாய்ஸ் இளைஞர்கள் கோபமடைந்திருந்துள்ளனர்.

மேலும் அன்பு பாய்ஸ் காளையை அடக்கிய இன்பரசன் காளை அடக்கியது குறித்து இன்ஸ்டாவில் ரிலீஸ் வாட்ஸ் அப்பில் ஸ்டேட்டஸ் உள்ளிட்டவற்றை வைத் துள்ளார். இதனால் மேலும் அன்பு பாய்ஸ் இளைஞர்கள் ஆத்திரமடைந்துள்ளனர்.

இதற்கிடையில் தான் இன்பரசன் காளைகளைப் பிடிப்பதை நிறுத்திவிட்டு காளை வளர்ப்பதில் ஈடுபட்டு வந்துள்ளார். மேலும் இன்பரசன் வளக்கும் காளையை எந்த ஜல்லிக்கட்டிலும் காளையர்களிடம் பிடிபடாத நிலையில் அன்பு பாய்ஸ் இளைஞர்கள் அந்த ஜல்லிக்கட்டு காளையை வம்பு இழுத்து இன்ஸ்டால் ரிலீஸ் வாட்ஸ் அப்பில் ஸ்டேட்டஸ் உள்ளிட்டவற்றை வைத்துள்ளனர்.

இதனால் இன்பரசன் ஆத்திரமடைந்த நிலையில் கடந்தாண்டு அக்டோபர் 20ம் தேதி ராயப்பட்டி பகுதியில் உள்ள டாஸ்மாக் கடையில் வைத்து இன்பரசன் மற்றும் அவரது நண்பர்கள் அன்பு பாய்ஸ் இளைஞர்களுடன் மோதலில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. இது சம்பந்த மாக சம்பட்டி விடுதி காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து சிலரைகைது செய்த நிலையில் பின்னர் அவர்களும் பிணையில் வெளிவந்துள்ளனர்.

பின்னர் காவல்துறையினர் மற்றும் கிராமத்தின் முக்கியஸ்தர்கள் பங்கு பெற்று இன்பரசன் தரப்பின ரையும் அன்பு பாய்ஸ் இளைஞர்களையும் சமரச பேச்சு வார்த்தை நடத்தி இனி இருதரப்பினருக்கும் எந்தவித பிரச்சனையும் ஏற்படக் கூடாது என்று பேசி முடித்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில்தான் அன்பு பாய்ஸ் இளைஞர்கள் இன்பரசன் மீது உள்ள கோவத்தை மனதிலேயே வைத்திருந்துள்ளனர்.

இதற்கிடையில் தான் திங்கட்கிழமையான இன்று புதுக்கோட்டை அடுத்த அழகம்மாள் புரத்தில் நடைபெற்ற வரும் கட்டடப் பணிக்கு சென்ட்ரிங் வேலை செய்ய இன்பரசன் மற்றொரு நபருடன் இரு சக்கர வாகனத்தில் அமர்ந்து சென்றுள்ளார்.

அப்போது அன்பு பாய்ஸ் என்று எழுதப்பட்ட இரண்டு இருசக்கர வாகனங்களில் வந்த ஆறு நபர்கள் இன்பரசன் வந்த இருசக்கர வாகனத்தை ஒரு இருசக்கர வாகனத்தை விட்டு மோதியுள்ளனர். இதில் சுதாரித்துக் கொண்ட இன்பரசன் இருசக்கர வாகனத்தில் இருந்து ஓடத் தொடங்கியுள்ளார். ஓடிய இன்பர்சனை இளைஞர்கள் துரத்தி அவர்கள் எடுத்து வந்த கத்தி உள்ளிட்ட கொடூர ஆயுதங்களால் இன்பரசன் பணி செய்ய வந்துள்ள கட்டடத்திற்கும் அழகாம்பாள்புரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கும் நடுப்புறமாக வைத்து இன்பரசனை கொடூரமாக விட்டு விட்டு இருசக்கர வாகனங்களை அங்கேயே விட்டுவிட்டு சென்றுள்ளனர்.

இதில் ரத்த வெள்ளத்தில்இன்பரசன்துடிதுடித்து கிடந்த நிலையில் இது குறித்த பகுதியினர் வல்லத்திராக்கோட் டை காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்துவிட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்து வ ம னைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்த நிலையில் அங்கு இன்பரசனை பரிசோதனை செய்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற புதுக்கோட்டை நகர துணை காவல் கண்காணிப்பாளர் பிருந்தா தலைமையிலான போலீசார் இந்த கொலை சம்பவம் குறித்து விசாரணை செய்தார்.

இந்த விசாரணையில் இன்பரசனை கொடூரமாக வெட்டி கொலை செய்தது அன்பு பாய்ஸ் குழுவைச் சேர்ந்த பொற்பனைக் கோட்டை மணக் கொல்லை தோப்பு கிராமத்தைச் சேர்ந்த விக்னேஷ்(21), தெற்கு இம்மனாம்பட்டி ரஞ்சித், பாப்பான் கொல்லை கிராமத்தைச்சேர்ந்த ரோகேஷ், சீனு, திருமூர்த்தி உள்ளிட்ட ஆறு நபர்கள் என்பது தெரிய வந்ததைத் தொடர்ந்து அந்த ஆறு நபர்களையும் போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

இந்நிலையில் தான் கொலை செய்யப்பட்ட இன்பரசனி ன் உடல் உடற்குறு ஆய்வுக்காக புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்வைக்கப்பட் டுள்ள நிலையில் இன்பரசனின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் இன்பரசனை கொலை செய்த குற்றவாளி களை உடனடியாக கைது செய்ய வேண்டும் என்றனர்.



## வாணியம்பாடி இஸ்லாமியா ஆண்கள் பள்ளி மாணவர்கள் மாநில அளவிலான குத்துச்சண்டை போட்டியில் சாதனை!

வாணியம்பாடி, ஜன.14

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி கோட்டை பகுதியில் இயங்கி வரும் இஸ்லாமியா ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் மாநில அளவிலான குத்துச்சண்டை போட்டியில் சாதனை படைத்துள்ளார்.

தேனி மாவட்டம் கம்பம் பகுதியில் உள்ள அல்அசார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் கடந்த 6 மற்றும் 7 ஆம் தேதி மாநில அளவிலான குத்துச்சண்டை போட்டிகள் நடைபெற்றது. இப்போட்டியில் மாநிலம் முழுவதும் இருந்து 38 மாவட்டங்களை சேர்ந்த மாணவர்கள் பங்கேற்றனர்.

இதில் வாணியம்பாடி இசுலாமிய ஆண்கள் மேல்நிலைப்பள்ளி +2 மாணவன் எஸ். முஹம்மத் பைசூர் ரஹ்மான் (19 வயதுக்குட்பட்ட பிரிவில்),+1 மாணவன் முஹம்மத் அமீத் முனஸ்ஸம் (17 வயதுக்குட்பட்ட பிரிவில்) ஆகியோர் பங்கேற்று வெள்ளிப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.

சாதனை படைத்த மாணவர்களுக்கு பள்ளி தாளாளர் ஹாபிஸ் சாஜித் அஹமத், பள்ளி தலைமை ஆசிரியர் கே.ஹபீபுர் ரஹ்மான், உதவி தலைமை ஆசிரியர் முனைவர் ராஜா ஹுசைன், ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் முனைவர் அதில் ரயீஸ், தன்வீர் அஹ்மத், சையத் இப்ராஹீம், மஸ்ரூர் அஹ்மத், பைஜான் ஆகியோர் பாராட்டி வாழ்த்துகளை தெரிவித்தனர்.

## பார்ட்னர் இந்திய இருசக்கர வாகனங்களுக்கு உண்மையான உதிரிபாகங்களை அறிமுகம் செய்தது!

சென்னை, ஜன.14

இந்திய இருசக்கர வாகன எதிர்கால சந்தையை உறுதிப்படுத்தும் வகையில், பார்ட்னர் நிறுவனம் உண்மையான ICE மற்றும் EV உதிரிபாகங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இதில் போலி பொருட்கள், தரத்தில் மாற்றம் உள்ள உதிரி பாகங்கள் மற்றும் சீரற்ற விநியோக வலையமைப்புகள் போன்ற சவால்களை சமாளிக்கும் திறன் உள்ளது. பார்ட்னர் ஜென்யூன் வரம்பு OEM தரத்திலான உற்பத்தியாளர்களிடம் இருந்து பெறப்பட்டு, உண்மை வாழ்க்கை மெக்கானிக் சோதனைகளின் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது.

பார்ட்னர் நிறுவனம் ICE மற்றும் EV இருசக்கர வாகனங்களுக்கு உடனடி கிடைப்புத்திறன், சரியான பொருத்தம் மற்றும் நம்பகமான தரத்தை வழங்கும் மெக்கானிக் மையமான எதிர்காலம் வலையமைப்பை உருவாக்கியுள்ளது. புதிய தயாரிப்புகள் பார்ட்னர் ஆப், Partnr.in மற்றும் அமேசான் தளங்களின் வாயிலாக வொர்க்ஷாப் களுக்கு விரைவான, நேரடி அணுகல் வழங்குகின்றன.



"எதிர்கால சந்தையில் மெக்கானிக்குகளுக்கு நீண்டகால கிடைப்புத் தன்மையும் நம்பிக்கையும் வழங்குவதே எங்களின் நோக்கம்," என்று பார்ட்னர் நிறுவன தலைமை நிர்வாக அதிகாரி திரு விஷால் துபே தெரிவித்துள்ளார். "பார்ட்னர் ஜென்யூன் ஸ்பேர்ஸ் & லூப்ரிகண்ட்ஸ் மூலம், ICE மற்றும் EV உதிரி பாகங்களுக்கு ஒரே மாதிரியான, மெக்கானிக் சோதனை பெற்ற விநியோகத்தை கொண்டு வருகிறோம், இதன் மூலம் வொர்க்ஷாப் கள் தரம் குறித்த சந்தேகங்களை விட்டு உற்பத்தித்திறன் மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கையை மேம்படுத்த முடியும்."



## சதுரங்கப் போட்டியில் 2 தங்கம், 1 வெள்ளி, 1 வெண்கலம் திருப்பத்தூர் வீரமங்கை யாஷினியின் அசத்தல் சாதனை!

திருப்பத்தூர் ஜன.14

திருப்பத்தூர் மாவட்டம் தர்மராஜா கோயில் தெருவைச் சேர்ந்த பொன்முடி –சுகுணாதம்பதியரின்மகளானயாஷினி, சென்னை வேலம்மாள் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு பயின்று வருகிறார். சிறுவயதிலிருந்தே சதுரங்கத்தில் மிகுந்த ஆர்வம் கொண்ட யாஷினி, பல்வேறு மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்று தொடர்ந்து வெற்றி பெற்று சாதனை புரிந்து வருகிறார்.

மேலும் அந்த வகையில், நவம்பர் 2025ல் தாய்லாந்து நாட்டில் நடைபெற்ற 27 வது ஆசிய இளைஞர் சதுரங்க அணி சாம்பியன்ஷிப் போட்டியிலும், டிசம்பர் 2025ல் அசாம் மாநிலத்தில் நடைபெற்ற 14வது தேசிய பள்ளி சதுரங்க சாம்பியன் ஷிப் போட்டியிலும் பங்கேற்ற யாஷினி, சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இரண்டு தங்கப் பதக்கங்கள், ஒரு வெள்ளிப் பதக்கம் மற்றும் ஒரு வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றி சாம்பியன் பட்டம் வென்று இந்தியாவிற்கு பெருமை சேர்த்துள்ளார்.

போட்டிகளில் வெற்றி பெற்று திருப்பத்தூர் திரும்பிய யாஷினிக்கு, திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து அவரது இல்லமான தர்மராஜா கோயில் தெருவுக்கு வந்தடையும் வரை, பொதுமக்கள், குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் சார்பில் பட்டாசு வெடித்து கோலாகலமான வரவேற்பு அளிக்கப்பட்டது. பலரும் யாஷினியை பாராட்டி வாழ்த்துகளை தெரிவித்தனர்.

வெற்றி குறித்து யாஷினி கூறுகையில், "இந்திய நாட்டிற்காக விளையாடி இந்தியாவிற்கு பெருமை சேர்ப்பதே எனது ஒரே குறிக்கோள்" என தெரிவித்தார்.

இளம் வயதிலேயே உலக அரங்கில் தடம் பதித்து வரும் யாஷினியின் இந்த சாதனை, திருப்பத்தூர் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



## மத்தூர் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் சமத்துவ பொங்கல் விழா!

கிருஷ்ணகிரி,ஜன.14

கிருஷ்ணகிரி மாவட்டம் மத்தூர் ஒன்றியத்தில் மத்தூர் சோமேஸ்வரன் ஆலயத்தின்அருகே தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது இவ்விழாவிற்கு தலைமை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் முரளிவிஜய் தலைமையில் 200.க்கும் மேற்பட்டவர்களுக்கு பொங்கல் பரிசு வழங்கி தா.வே.கா கட்சி உறுப்பினர் குழந்தைக்கு கிஷோர் என்று பெயர் சூட்டினார்

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற விழாவிற்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர் சுகுமார் முன்னிலையிலும் மத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் விக்னேஷ் ஏற்பாட்டில் தமிழரின் பாரம்பரியமான மண்பானையில் பெண்கள் பொங்கல் வைத்து கட்சி தொண்டர்கள் அனைவரும் ஒன்று திரண்டு பொங்கலோ பொங்கல் பொங்கலோ பொங்கல் என்று சமத்துவ பொங்கல் கொண்டாடினார் இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் மணிகண்டன்மாவட்ட செயற்குழு உறுப்பினர் சிங்காரவேல் தகவல் தொழில்நுட்ப அணி மண்டல இணை ஒருங்கிணைப்பாளர் சூர்யா இளைஞர் அணி அமைப்பாளர் சத்யராஜ் பர்கூர் ஒன்றிய கழக செயலாளர்கள் பசுராஜ் வெங்கடேசன் மத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் திருமூர்த்தி ஊத்தங்கரை கிழக்கு உமாபாரதி உறுப்பினர் சேர்க்கை ஒருங்கிணைப்பாளர் கார்முகில் வேந்தன் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் மத்தூர் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் இப்ராஹிம் மணிகண்டன் நிவேதனா கதிர்வேல் அபிநயா அருணாச்சலம் ஐடிவி சக்தி இந்நிகழ்ச்சிக்கான ஒருங்கிணைப்பாளர்கள் மத்தூர் கிளை கழக நிர்வாகிகள் ஹரி விக்னேஷ் தவசி ரின்ஷன் மிதுலாஜ் சாகுல் ஹமீது கோகுல் பூவரசன் ஆகியோர் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் அனைவரும் கலந்து கொண்டனர்

## 19 நாடுகளைச் சேர்ந்த 800+ கண்காட்சி நிறுவனங்களுடன் இதுவரை மிகப்பெரிய பதிப்பு!



கோயம்புத்தூர், ஜன.14

இந்தியாவின் கார் சேவை மற்றும் பிந்தைய சந்தை (aftermarket) துறைக்கான மிகப்பெரிய சர்வதேச வர்த்தக கண்காட்சியில் ACMA Automechanika New Delhi 2026, பிப்ரவரி 5 முதல் 7 வரை டெல்லி யாஷோபுமி (IICC), ட்வார்காவில் நடைபெறுகிறது. 19 நாடுகளைச் சேர்ந்த 800க்கும் மேற்பட்ட கண்காட்சி நிறுவனங்கள் பங்கேற்கும் இந்த பதிப்பு, இதுவரை நடைபெற்ற கண்காட்சிகளில் மிகப்பெரியதாகும். 50,000 சதுர மீட்டர் பரப்பளவில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் 3,000க்கும் மேற்பட்ட பிராண்டுகள் தங்கள் தயாரிப்புகள் மற்றும் தீர்வுகளை காட்சிப்படுத்த உள்ளது. இந்திய ஆட்டோமொபைல் கூறுகள் மற்றும் ஆப்டர் மார்க்கெட் துறையின் வேகமான வளர்ச்சியை இந்த கண்காட்சி பிரதிபலிப்பதாக, மெஸ் ஃபிராங்க்ஃபர்ட் ஆசியா ஹோல்டிங்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் இயக்குநர் குழு உறுப்பினருமான திரு ராஜ் மாணிக் தெரிவித்தார். "ACMA Automechanika New Delhi 2026, உள்ளூர் மற்றும் சர்வதேச பங்கேற்பை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளதுடன், முழுமையான ஆப்டர் மார்க்கெட் தீர்வுகளை ஒரே மேடையில் கொண்டுவருகிறது. இந்தியாவை உலகளாவிய ஆட்டோமொபைல் சக்தி மையமாக உருவாக்கும் முயற்சிகளில் இது முக்கிய பங்கு வகிக்கும்," என்றார்.

மேலும், Automotive Component Manufacturers Association (ACMA) இயக்குநர் பொதுவியல் திரு வின்னி மேத்தா கூறுகையில், "இந்த கண்காட்சி தயாரிப்புகளை காட்சிப்படுத்துவதற்கு அல்ல; தொழில்நுட்பம் சார்ந்த, தரநிலை மையமாகும் ஆஃப்டர் மார்க்கெட் தீர்வுகளுக்கான நம்பகமான உலகளாவிய கூட்டாளியாக இந்தியாவை நிலைநிறுத்துவது இதன் நோக்கம். MSMEகள், Tier1 சப்ளையர்கள் மற்றும் சர்வதேச பிராண்டுகளின் வலுவான பங்கேற்பு, துறையின் உயர் மதிப்பு மற்றும் புதுமை நோக்கிய முன்னேற்றத்தை வெளிப்படுத்துகிறது," என்றார்.



## அதிக பாரம் ஏற்றக் கோரி தனியார் ஆலைகள் நெருக்கடி: ஈரோடு ஆட்சியர் அலுவலகத்தில் கரும்பு கட்டுகளுடன் வாகன உரிமையாளர்கள் மனு!

ஈரோடு.ஜன.14

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில், கரும்பு வாகன உரிமையாளர்கள் கூட்டமைப்பினர் கரும்பு கட்டுகளுடன் வந்து நூதன முறையில் மனு ஒன்றை அளித்தனர். அந்த மனுவில், ஈரோடு மாவட்டத்தில் உள்ள தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகங்கள், போக்குவரத்து விதிகளை மீறி 6 சக்கர லாரிகளில் நிர்ணயிக்கப்பட்ட 12 டன்னுக்கு பதிலாக, சுமார் 20 டன் வரை கரும்பு ஏற்றச் சொல்லி உரிமையாளர்களைக் கடுமையாக நிர்பந்திப்பதாகக் குற்றம் சாட்டியுள்ளனர். அதேபோல், விவசாயத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டிய டிராக்டர்களை அதிக பாரத்துடன் சாலைகளில் இயக்குவதால், ஈரமான விளைநிலங்களில் வாகனங்கள் சிக்கி விபத்துகள் ஏற்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். அதிக பாரம் ஏற்றுவது தொடர்பான உச்ச நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்தக் கோரியுள்ள அவர்கள், வரும் பிப்ரவரி 1ஆம் தேதி முதல் விதிகளின்படி சரியான அளவு பாரம் மட்டுமே ஏற்றப்படும் என உறுதி அளித்துள்ளனர். எனவே, லாரி மற்றும் டிராக்டர்களுக்குச் சரியான அளவு பாரம் மற்றும் முறையான வாடகையை நிர்ணயம் செய்து, வாகன உரிமையாளர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த மனுவில் வலியுறுத்தியுள்ளனர்.

# தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்கம் சார்பில் பத்திரிகையாளர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு!





சென்னை,ஜன.14

தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்கம் சார்பில் பத்திரிகையாளர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் விழா மற்றும் ஒற்றுமை பொங்கல் விழா 09.01.2026 அன்று சங்க தலைமை அலுவலகத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது. பத்திரிகையாளர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்பட்டது. பத்திரிகையாளர்களின் ஒற்றுமையை மேம்படுத்தும் நோக்கில் பொங்கலிட்டு பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. 2026 ஆண்டிற்கான சங்க காலண்டர் வெளியிடப்பட்டது.

விழாவில் கலந்துக் கொண்ட 200க்கு மேற்பட்ட பத்திரிகையாளர்களுக்கு அரிசி, வெல்லம், கரும்பு, நெய், முந்திரி, திராட்சை ஏலக்காய், உள்ளிட்ட பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்பட்டது.

ஆண்டுதோறும் பத்திரிகையாளர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்குதல் மற்றும் ஒற்றுமை பொங்கல் விழா தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்கம் சார்பில் கொண்டாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

சங்க நிர்வாகிகள் மூத்த பத்திரிகையாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள் உள்ளிட்ட ஏராளமான பத்திரிகை மற்றும் ஊடகவியலாளர்கள் கலந்துக் கொண்டனர்.

**என்றும் பத்திரிகையாளர் நலனில்..**
**எஸ்.சரவணன் தலைவர் தமிழ்நாடு**
**பத்திரிகையாளர் நலச்சங்கம்**
**-9840035480**



சென்னை மாநகராட்சியின் பல்வகை பயன்பாட்டிற்காக ரூ.34.40 கோடி மதிப்பீட்டில் 64 புதிய வாகனங்களின் பயன்பாட்டினை ரிப்பன் கட்டட வளாகத்தில் கொடியசைத்துத் மேயர் ஆர்.பிரியா தொடங்கிவைத்தார். இந்நிகழ்ச்சியில், துணைமேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், இணை ஆணையாளர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப.ஜெயசீலன், மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், நிலைக் குழுத் தலைவர்கள் டாக்டர் கோ. சாந்தகுமாரி (பொது சுகாதாரம்), த.விசுவநாதன் (கல்வி), தலைமைப் பொறியாளர்கள் பாலமுரளி, சீனிவாசன், ராம்கி நிறுவன துணைத் தலைவர் வெங்கடேசன், திட்டத் தலைவர் பரிசுத்தம் வேதமுத்து, செயலாக்கத் தலைவர் ரவி சண்முகம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அதிவேகமான மற்றும் தடையற்ற சேவையின் மூலம் ஹோம் டெலிவரி அனுபவத்தை ஆம்வே இந்தியா மறுவரையறை செய்கிறது!

Amway

சேலம், ஜன.14

ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுத் தேவைகளை பூர்த்தி செய்யும் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான ஆம்வே இந்தியா, தனது ஹோம் டெலிவரி செயல்பாடுகளில் மேற்கொண்டுள்ள முக்கிய மேம்பாடுகளைப் பகிர்ந்துள்ளது. இந்த மேம்பாடுகள், நாடு முழுவதும் உள்ள விநியோகஸ்தர்கள் மற்றும் அவர்களது வாடிக்கையாளர்களுக்கு அதிவேகமான, அதிக நம்பகமான மற்றும் தடையற்ற ஆர்டர் அனுபவத்தை வழங்குவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. இந்த மாற்றத்தைக் குறித்து ஆம்வே இந்தியாவின் நிர்வாக இயக்குனர். ரஜனீஷ் சோப்ரா கூறுகையில், "விநியோகஸ்தர்கள் மற்றும் வாடிக்கையாளர்களை எங்கள் உத்தியின் மையமாகக் கொண்டு, சிறந்த சேவையை வலுப்படுத்துவதற்கும், தயாரிப்பு கிடைப்பதை மேம்படுத்துவதற்கும் அத்துடன் இந்தியா முழுவதும் தடையற்ற அனுபவங்களை வழங்குவதற்கும் ஒரு மூலோபாயத் தூணாக 'ஹோம் டெலிவரி' சேவையை நாங்கள் உருவாக்கி வருகிறோம். இந்த மாற்றமானது வலுவான தேசிய கூட்டணிகள், கூர்மையான டிஜிட்டல் கட்டமைப்பு மற்றும் மிகவும் சுறுசுறுப்பான விநியோகச் சங்கிலி ஆகியவற்றில் செய்யப்பட்ட மூலோபாய முதலீடுகளால் இயக்கப்படுகிறது; இது விரைவாகச் செயல்படவும், புத்திசாலித்தனமாக இயங்கவும் மற்றும் அதிக நிலைத்தன்மையுடன் சேவையாற்றவும் எங்களுக்கு உதவுகிறது. நாங்கள் முன்னோக்கிச் செல்லும்போது, நம்பகத்தன்மையை வலுப்படுத்துதல், அன்பாக்சிங் அனுபவத்தை மேம்படுத்துதல் மற்றும் இந்தியா முழுவதும் உள்ள எங்கள் வாடிக்கையாளர்களுக்காக எதிர்காலத்திற்குத் தயாரான விநியோகக் கட்டமைப்பை உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம் தரத்தை மேலும் உயர்த்துவதில் தொடர்ந்து கவனம் செலுத்துவோம்," என்றார்.



# ஊதிய நிலுவை தொகை வழங்காவிட்டால் சாலை மறியல் உள்ளிட்ட தொடர் போராட்டம்!

## மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி ஆபரேட்டர்கள் அறிவிப்பு!!

பாலக்கோடு, ஜன.14

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு ஒன்றியத்தில் 32 ஊராட்சிகளில் உள்ள கிராமங்களில் 100க்கும் மேற்பட்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளின் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது,

இந்த மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் ஆபரேட்டராக பணிபுரியும் ஊழியர்கள், ஊராட்சிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு 7வது ஊதியக்குழு பரிந்துரையின் படி 1.7.2019 முதல் வழங்கப்பட வேண்டிய ஊதிய தொகை வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது,

சிக்கமாரண்டஅள்ளி, பஞ்சப்பள்ளி, கும்மனூர் , கொலசனஅள்ளி, சாமனூர் ஆகிய ஊராட்சிகளில் மட்டும் நிலுவை தொகை வழங்கப்பட்டுள்ளது,

ஏனைய ஊராட்சிகளுக்கு உடனடியாக நிலுவைத் தொகை வழங்க கோரி தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை தொழிலாளர்கள் சங்கம் சார்பில் மாநில பொதுசெயலாளர் கிருஷ்ணசாமி தலைமையில் வட்டார வளர்ச்சி அலுவலர் ரேணுகாவிடம் மனு அளித்தனர்.

அடுத்த மாதம் 10ம் தேதிக்குள் நிலுவைத் தொகை வழங்கப்படாவிட்டால் வேலை நிறுத்தம், முற்றுகை போராட்டம், சாலைமறியல் உள்ளிட்ட தொடர் போராட்டங்களில் ஈடுபடுவோம் என தெரிவித்தனர். அது சமயம் மாவட்ட செயலாளர் மணி, வட்டார தலைவர் அருள்மணி, நிர்வாகிகள் மனோகரன், ராஜேந்திரன், முனிராஜ், மாணிக்கம் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# கந்திலி அருகே 2 பள்ளி மாணவர்கள் தண்ணீர் தொட்டியில் மூழ்கி உயிரிழப்பு!



திருப்பத்தூர்.ஜன.14

திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி அடுத்த கெஜல்நாயக்கன்பட்டி பகுதியை சேர்ந்த அப்துல் பஷீர் மகன் அஜ்மல் (12) தனியார் பள்ளியில் 6ம் வகுப்பு படித்து வந்த மாணவனும், அதே பகுதியை சேர்ந்த அஸ்லம் மகன் அர்மான் (12) என்ற மாணவன் அதே பகுதியில் உள்ள அரசு பள்ளியில் ஆறாம் வகுப்பு படித்து வந்த நிலையில் நேற்று பள்ளி விடுமுறை என்பதால் அருகில் உள்ள மாந்தோப்பிற்கு விளையாட சென்றவர்கள் இரவு வெகு நேரம் ஆகியும் வீடு திரும்பாததால் பகுதி மக்கள் மற்றும் உறவினர்கள் பல இடங்களில் தேடி பார்த்து உள்ளனர்.

அப்போது விவசாயத்திற்காக ஏற்படுத்தி இருந்த தண்ணீர் தொட்டியில் மூழ்கி நீச்சல் தெரியாத இருவரும் சடலமாக கிடந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். தகவலின் பேரில் கந்திலி போலிசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று இரண்டு மாணவர்களின் புரதங்களை கைபற்றி பிரேத பரிசோதனைக்காக திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



# பொங்கல் பண்டிகையையொட்டி பென்னாகரம் வாரச் சந்தையில் ஆடுகள் விற்பனை படுஜோர்!

பென்னாகரம்,ஜன.14

பொங்கல் பண்டிகையையொட்டி பென்னாகரம் வாரச் சந்தையில் ஆடுகள் விற்பனை படுஜோராக நடைபெற்றது.

தர்மபுரி மாவட்டம் பென்னாகரத்தில் சந்தை தோப்பு என்ற இடத்தில் செவ்வாய்க்கிழமை தோறும் வாரச்சந்தை கூடுவது வழக்கம். இந்த சந்தைக்கு தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் மாவட்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வியாபாரிகள், பொது மக்கள் ஆடுகளை விற்பனைக்காக கொண்டு வருகின்றனர். மலைப் பகுதிகளில் இருந்து கொண்டு வரப்படும் ஆடுகளுக்கு வியாபாரிகளிடையே நல்ல வரவேற்பு உள்ளது. இதனால் இந்த சந்தைக்கு சேலம், தலைவாசல், கெங்கவல்லி, வேலூர் , உள்ளிட்ட பகுதிகளில் இருந்து ஏராளமான வியாபாரிகள் வந்து ஆடுகளை வாங்கி செல்கின்றனர் .

இந்த நிலையில் இன்று இந்த வாரச்சந்தைக்குபொங்கல்பண்டிகையையொட்டு 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட செம்மறி, வெள்ளாடுகள்விற்பனைக்காக கொண்டு வந்து இருந்தனர். எடைக்கு ஏற்றார் போல் ரூ 2 ஆயிரத்தில் இருந்து அதிக பட்சமாக ரூ 15 ஆயிரம் வரை விலை போனது. இந்த ஆடுகளை வியாபாரிகள் , பொதுமக்கள் போட்டி போட்டு விலை கேட்டதால் ஆடுகளின் விற்பனை படு ஜோராக நடைபெற்றது.

மேலும் பொங்கல் பண்டிகை இரண்டு நாட்களில் வர இருப்பதால் மாடுகளுக்கு தேவையான மூக்கணாங்குயிர்கள், பானை, கரும்பு வெள்ளம் மற்றும் கோலத்திற்கு உண்டான பலவித வண்ணங்களில் வண்ணப் பொடிகள் குளித்தவற்றை சந்தையில் வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனர் இதனை ஏராளமான பொதுமக்கள் வாங்குவதற்காக காலை முதல் சந்தையில் குவிந்து வருகின்றன. மேலும் பொங்கல் பண்டிகை முன்னிட்டு வருகின்ற வெள்ளிக்கிழமை 16.01.2026 வார சந்தை நடைபெறும் என்று வார சந்தை குத்தகைதாரர் தெரிவித்துள்ளனர்.

# வாணியம்பாடி அருகே தேசிய நெடுஞ்சாலையில் திடீரென லாரி கொழுந்துவிட்டு எரிந்ததால் பரபரப்பு!



வாணியம்பாடி, ஜன.14

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அருகே தேசிய நெடுஞ்சாலையில் திடீரென லாரி கொழுந்துவிட்டு எரிந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த சுரேஷ் என்பவர் சிமெண்ட் மிக்சிங் லாரியை ஆந்திரா மாநிலம் நெல்லூர் பகுதிக்கு சென்று கொண்டிருந்தனர்.

அப்போது திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த கேதண்டபட்டி அருகே லாரியை சாலை ஓரம் நிறுத்திவிட்டு லாரியின் முகப்பு பகுதியில் கேஸ் அடுப்பில் குக்கர் மூலம் சமையல் செய்து கொண்டிருந்தனர்.

அப்போது எதிர்பாராத விதமாக திடீரென குக்கர் வெடித்து சுரேஷ் படுகாயம் அடைந்து லாரியின் முகப்பு பகுதியில் இருந்து கீழே குறித்து உயிர் தப்பினார்.

இதனை தொடர்ந்து லாரி கொழுந்து விட்டு எரிய தொடங்கியது. அப்போது திடீரென லாரியில் இருந்த சிலிண்டரும் அதிக சத்தத்துடன் வெடித்து சிதறியது. இதன் காரணமாக தேசிய நெடுஞ்சாலையில் சிறிது நேரம் லாரி கொழுந்துவிட்டு எரிந்தது. தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு நாட்றம்பள்ளி தீயணைப்புத் துறையினர் விரைந்து சென்று தீயை அணைத்தனர். மேலும் நாட்றம்பள்ளி போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று லாரி ஓட்டுனர் சுரேஷ் மற்றும் உதவியாளர் கோகுல் ஆகியோரை மீட்டு சிகிச்சைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# அறுவடை திருநாளை ஊட்டச்சத்து நிறைந்த கலிபோர்னியா பாதாம் உடன் ஆரோக்கியமாக, மகிழ்ச்சியாக கொண்டாடுங்கள்



கோவை, ஜன.14

இந்தியாவில் மகர சங்கராந்தி பண்டிகை அறுவடை திருநாள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட ஆற்றலின் வருகையைக் குறிக்கிறது. இது பொங்கல், லோஹ்ரி, உத்தராயன் மற்றும் மாக் பிஹு எனப் பல பெயர்களில் பல்வேறு பகுதிகளிலும் கொண்டாடப்படுகிறது. இது இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் புதிய தொடக்கங்களின் அடையாளமாகும். குடும்பத்தினர் ஒன்றுகூடி பாரம்பரிய உணவுகள் மற்றும் இனிப்புகளைத் தயாரித்து உண்டு மகிழும் இவ்வேளையில், கலிபோர்னியா பாதாமை அதனுடன் சேர்த்துக்கொள்வது, கொண்டாட்டத்தின் உற்சாகத்தில் ஆரோக்கியத்தையும் அளிக்கும் ஒரு சிறந்த வாய்ப்பாக இருக்கும் மேலும் கொண்டாட்டத்தின் போது சுவையான உணவுகளை சாப்பிடும் அதே வேளையில், உடல் நலத்தையும் காக்க பாதாம் உதவுகிறது. ஆயுர்வேத நிபுணர் டாக்டர் மதுமிதா கிருஷ்ணன் கூறுகையில், பண்டிகை கால உணவுகளில் சேர்க்கப்படும் பொருட்களில் பாதாமும் ஒரு சிறந்த பொருளாகும். அன்றாட ஆரோக்கியத்தில் சமச்சீர் உணவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கிய ஆலோசகர் ஷீலா கிருஷ்ணசாமி கூறுகையில், மகர சங்கராந்தியில் தயாரிக்கப்படும் உணவுகள் வழக்கமாகவே சுவை மிகுந்ததாக இருக்கும். ஆனால் நாம் தேர்ந்தெடுக்கும் பொருட்கள்தான் வித்தியாசத்தை ஏற்படுத்துகின்றன. பாரம்பரிய உணவுகளில் பாதாமைச்சேர்ப்பதன் மூலம், உணவின் ருசியை குறைக்காமலேயே, உணவை மிகவும் சத்தானதாகவும் ஆரோக்கியமானதாகவும் மாற்ற முடியும் என்று தெரிவித்தார்.



தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக அதியன் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 27 அரசு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு இட்டு வைப்பு பத்திரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், வழங்கினார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் காயத்ரி, தனித்துணை ஆட்சியர் (சபாதி) சுப்பிரமணியன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஐ.ஜோதி சந்திரா, மாவட்ட பழங்குடியினர் நல அலுவலர் ஆ.க.அசோக்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அரசுத்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ரிக் உரிமையாளர்கள் நேற்று முதல் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.